**ரணவிரு சேவா அதிகார சபை - 2023**

**-----------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**ரணவிரு சேவா அதிகார சபையின்** (''அதிகார சபை'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகார சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு அதிகார சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு வீச்சு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி பேரவையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பேரவைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பேரவையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகார சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள்இ நடைமுறைகள்இ புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- அதிகார சபையின் சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பேரவை இணங்கியிருந்ததா என்பதும்,
- அதிகார சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- அதிகார சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீது கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| பொருத்தமான நியமத்துடன் தொடர்புடைய இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 06 இன் 08 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட பெறுமதி ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகளினை பிரதிபலிக்கும் வகையில் நிறுவனத்தினால் சீராக்கப்பட வேண்டுமாயினும் 2023 ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 594,500 செலவொன்று கணக்கிடப்படவில்லை. அதன் விளைவாக அட்டுறு செலவினங்கள் அந்த தொகையினால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. | பார்வையற்ற போர் வீரர்களுக்கு வழங்குவதற்காக ஜே.எம். விக்ரமராச்சி கம்பனியிடமிருந்து மூக்குக்கண்ணாடிகள் கட்டளையிடபட்டன. இந்த கட்டளைக்காக காசோலை ஒன்று கையொப்பமிடப்பட்டது. எனினும் வழங்குனருக்கு காசோலையினை விநியோகிப்பதற்கு முன்பாக போர் வீரர்களுக்கு வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் குறைபாடுடையன என்று அறிக்கையிடப்பட்டதனால் வழங்குனருக்கு காசோலையினை விநியோகிக்கவில்லை. இந்த தொகை நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய செலவாக இந்த தொகை பதியப்படவில்லை | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அடுத்த மூன்று ஆண்டுகளில் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 195,886,789 தொகையினை நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் கணக்கிடப்படுவதற்கு பதிலாக மூலதன மானியமாக பதியப்பட்டுள்ளது. | 2021 ஆம் ஆண்டில் வீடமைப்பு மற்றும் சுய தொழில் கடன்களுக்காக ரூபா 280,250,000 மூலதன மானியம் வழங்கப்பட்டதுடன் இது மூலதன பங்களிப்பு கணக்கில் பெறுவனவாக பதிவு செய்யப்பட்டது. மேலதிகமாக, 2021 மற்றும் 2022 ஆம் தொடர்புடைய ஆண்டுகளில் மீள்செலுத்தப்பட்ட ரூபா 85.36 மில்லியன் தொகை அரசாங்க மூலதன பங்களிப்பு கணக்கிலிருந்து கழிப்பனவாக பதிவு செய்யப்பட்டது. ஐந்தொகையில் அரசாங்க மூலதன பங்களிப்பு கணக்கானது நடைமுறையல்லாத பொறுப்பாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. | நிதித் தகவல்களினை துல்லியமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ)மோட்டார் வாகன பழுபார்த்தல் செலவினமான ரூபா 159,900 தொகையினை மீளாய்வாண்டிற்கான அட்டுறு செலவினமாக கணக்கீடு செய்யத் தவறியமையினால் அந்த தொகையினால் ஆண்டிற்கான இலாபம் உயர்த்திக்காட்டப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் அவ்வகையான குறைபாடுகள் ஏற்படாதவாறு நிச்சயித்துக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளினை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று குறித்துரைக்கப்பட்டுள்ளது. | உரிய ஆண்டிற்கான அட்டுறு செலவினத்தினை துல்லியமாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டில் இறுதி இருப்பானது ரூபா 192,470 தொகையினால் குறைத்துக்காட்டப்பட்டதன் விளைவாக அதே தொகையினால் நிறுவனத்தின் மிகை குறைத்து அறிக்கையிடப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் அவ்வகையான குறைபாடுகள் ஏற்படாதவாறு தடுத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | இறுதி இருப்பினை மதிப்பீடு மற்றும் பதிவு செய்தல் என்பன துல்லியமாக இருக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாபிய ரேகாவரன கொடுப்பனவுகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 யூன் தொடக்கம் 2017 நவம்பர் வரை 18 மாத காலப்பகுதியில் ரூபா 4,978,580 தொகை முறைகேடாக செலுத்தப்பட்டது. அறிக்கையிடும் ஆண்டின் இறுதியளவில் இது அறவிடப்படவில்லை. | தற்போது குற்றவியல் விசாரணைத் திணைக்களம் (சீ.ஐ.டி) இந்த முறைகேடு தொடர்பாக விசாரணைகளை நடத்தி வருகின்றது. இந்த முறைகேடு தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 104 இன் கீழ் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அண்ணவாக கணக்காய்வின் 25 | நிதிகள் தாமதமின்றி அறவிடப்படுவதனை நிச்சயித்துக்கொள்வதற்கு முறைகேடு தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சதவீதம் இன்று வரை நிறைவு செய்யப்பட்டுள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது. | |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் கொழும்பு மாவட்டத்தில் யுத்த வீரர்களின் பெண் படைப்பிரிவினை அமைப்பதற்காக இரு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,830,450 முற்பணக் கொடுப்பனவு மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்க்கப்படவில்லை. | முற்பண கொடுப்பனவு தொடர்பாக இரண்டு உள்ளக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்பட்டு அதிகாரிகள் விடுவிக்கப்பட்டனர். முகாமைத்துவ சபையின் வழிகாட்டுதல்களினை தொடர்ந்து நிதிப்பிரமாணம் 104 இன் கீழ் விசாரணையொன்றினை நடத்துவதற்கு 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதியில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. | பொருத்தமான முற்பண கொடுப்பனவினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 தொடர்புடைய தரப்பினர்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 14 இன் 25 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட வேண்டுமாயினும் அதிகார சபைக்காக கடமையினை பொறுப்பேற்ற முப்படை மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் முப்படைகள், சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் பொலிஸ் ஆகியவைகளிடமிருந்து 55 அதிகாரிகள் அதிகார சபையினுள் கடமையை பொறுப்பேற்று இருந்தனர். எதிர்காலத்தில் அவ்வகையான குறைபாடுகள் ஏற்படாதவாறு தடுத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளினை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தகவல்களினை வெளிப்படுத்த வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் 264 மற்றும் 138 (3) (4) (5) (6) | சகல கொடுப்பனவுகளினை மேற்கொள்ளும் போது முறையான பற்றுச்சீட்டுக்கள் | நிதிப்பிரமாணத்தினால் வேண்டப்படுகின்ற சகல ஆவணங்களும் கொடுப்பனவு உறுதிப்பத்திரத்துடன் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் உறுதிப்பத்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டு, சான்றுறுதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அல்லது பட்டியல்கள் உறுதிப்பத்திரத்துடன் இணைக்கப்பட வேண்டுமாயினும், ரணவிரு தின கொண்டாட்டத்துடன் தொடர்புடைய செலவினமாக ரூபா 1,752,065 தொகை இந்த பிரமாணத்திற்கு முரணாக ஆறு உறுதிப்பத்திரத்துடன் முறையற்ற விதத்தில் இணைக்கப்பட்டுள்ள பற்றுச்சீட்டு மற்றும் பட்டியல் என்பவைகளின் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. | முறையாக இணைக்கப்பட்டுள்ளன என்று உறுதிப்படுத்திய பின்னர் மாத்திரமே உரிய கொடுப்பனவினை மேற்கொள்ளுமாறு திணைக்கள கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிவுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | செய்யப்பட்டு, கொடுப்பனவிற்காக செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ)நிதிப் பிரமாணம் (5) | 137 | உறுதிப்பத்திரங்கள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மாத்திரமே அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதோடு முறையாக அவைகள் பெறப்பட்டு, மீளாய்வு செய்யப்பட்டதனை நிச்சயித்துக் கொள்ளவும் வேண்டும். எனினும் இந்த தேவைப்பாட்டுக்கு முரணாக உரிய வழங்களினை பெற்றுக் கொள்வதற்கு முன்பாகவே ரணவிரு சேவா அதிகார சபையானது ரணவிரு தின விழாவுடன் தொடர்புடைய முழுச் செலவாக லைட்ஹவுஸ் கெலரிக்கு ரூபா 200,000 தொகை முற்பணமொன்றினை அங்கீகரித்து செலுத்தியுள்ளது. | முப்படை மற்றும் பொலிஸ் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் வருடாந்தம் தேசிய போர் வீரர்கள் நினைவேந்தல் தின நிகழ்வு ஒழுங்கமைக்கப்படுகிறது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்விற்காக, விஷேடமாக அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் போர் வீரர்களின் குடும்பங்கள் என்பவற்றினை உள்ளடக்கிய 400 மக்களுக்காக வழங்குவதற்கு என கடற்படையின் லைட்ஹவுஸ் கெலரியிடமிருந்து சிற்றுண்டிப் பொதிகளை கொள்வனவு செய்வதற்கு கட்டளை இடப்பட்டது. நிறுவனத்தின் கோரிக்கையின் பேரில் முற்பண கொடுப்பனவாக ரூபா 200,000 செலுத்தப்பட்டது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வேலையினை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) நிதிப் பிரமாணம் (4) | 104 | நட்டம் அல்லது சேதம் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்தினுள் பூரண | பொலிஸ் விசாரணை நடைபெற்று வருவதுடன் நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் உள்ளக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வேலையினை |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும் 2023 பெப்ரவரி 03 ஆம் திகதியில் இரண்டு குளிரூட்டி அலகுகளிலிருந்து திருடப்பட்ட ரூபா 110,833 பெறுமதியான செம்புக் குழாய்கள் தொடர்பான விசாரணை முடிவுறுத்தப்படவில்லை. | விசாரணையினை நடத்துவதற்கு நியமிக்கப்பட்ட குழு அதன் அறிக்கையினை சமர்ப்பித்துள்ளது. முகாமைத்துவ சபையின் அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) 1999 இன் 54 ஆம் இலக்க ரணவிரு அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு | ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் அங்கவீனமானவர்கள், இறந்தவர்கள், அல்லது காணாமல் போன ஆயுதப்படைகள் மற்றும் காவல்துறையின் சகல உறுப்பினர்கள், அவர்களுடன் தங்கி வாழ்வோரையும் சேர்த்து பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும் என்று அதிகாரச்சட்டம் குறிப்பிடுகின்றது. எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரை இந்த பெயர்களை உள்ளடக்குகின்ற பூரண தரவுத்தளமொன்று நிறுவப்படவில்லை. | இறந்த, காணாமல் போன மற்றும் அங்கவீனமான போர் வீரர்களின் அடிப்படைத் தகவல்கள் அவர்களுடைய சேவை இலக்கத்தைக் அடிப்படையாகக் கொண்டு தகவவல் முறைமை இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது, அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள் தொடர்பான தகவல்களானவை பிரதேச செயலக அலுவலகங்கள் மட்டத்தில் உள்ள கிராம சேவையாயளர்கள் ஊடாக சேகரிக்கப்படுகின்ற தகவல்களைக் கொண்டு இற்றைப்படுத்தப்படுகின்றன. | 1999 இன் 54 ஆம் இலக்க ரணவிரு அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) பொதுத் துறையினுள் மனித வளங்களினை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக 02/2018 ஆம் இலக்கத்தின் கீழ் 2018 ஜனவரி 24 ஆம் திகதியன்று பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை | அரச நிறுவனங்களில் வேலை செய்யும் பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் சகல ஊழியர்களுக்காகவும் வருடாந்த செயல்திறன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ரணவிரு சேவா அதிகார சபை இந்த வருடாந்த செயல்திறன் உடன்படிக்கைகள் கையொப்பமிடவில்லை. | அதிகார சபையின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கும், விளைதிறனுக்கும் தற்போதுள்ள 115 பணியாளர் உறுப்பினர்கள் (57 நிரந்தரம் மற்றும் 59 இணைப்பு) போதுமானதாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு இந்த விடயத்தினை அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதிகார சபையின் பணியாளர்களை மீள்கட்டமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி 182 பணியாளர் உறுப்பினர்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மனித வள அபிவிருத்தி திட்டம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபை அவ்வாறனதொரு திட்டத்தினை தயாரிக்கவில்லை. | தேவையாக உள்ளன என்று இனங்காணப்பட்டது. இந்த வெற்றிடங்களினை நிரப்பிய பிற்பாடு பொதுத் துறையினுள் மனித வளங்களினை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக 02/2018 ஆம் இலக்கத்தின் கீழ் 2018 ஜனவரி 24 ஆம் திகதியன்று பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.9 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 01 இல் ஏழு நாள் அழைப்பு வைப்பாக இலங்கை வங்கியில் ரூபா 1,500,000 தொகை வைப்புச்செய்யப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 வருடங்களுக்கு மேலாகியும் இந்த முதலீட்டினை மீளாய்வு செய்வதற்கோ அல்லது உரிய வட்டியினை கணக்கீடு செய்வதற்கோ இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த வைப்பிலிருந்தான வட்டி வருமானம் மீளப்பெறும் நேரத்தில் வழங்கப்படும் என்பதோடு வருட வட்டி வருமானத்தினை இனங்காண்பதற்கான சாத்தியங்கள் காணப்படவில்லை. இந்த வைப்பு தொடர்பான பரிந்துரைகள் அதிகார சபையின் முதலீட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் என்றும், முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் அடிப்படையில் அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது. | அரச நிதிகள் அதிகபட்ச விளைதிறனாக முதலீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 245,654,689 தொகை மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையாக ரூபா 121,972,695 தொகை காணப்பட்டது. ஆகையால், நிதி விளைவில் ரூபா 123,681,994 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது முன்னேற்றத்திற்கான காரணங்களாக ரூபா 140,555,624 தொகையினால் லாட்டரி வருமானம் அதிகரித்தமை, ரூபா 16,684,455 தொகையினால் நிலையான வருமானம் அதிகரித்தமை மற்றும் ரூபா 4,077,028 தொகையினால் இந்த வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்யும் நன்கொடை பெறுவனவு அதிகரித்தமை ஆகும். ஆனால், 2023 ஆம் ஆண்டிற்கான மொத்த லாட்டரி வருமானம் ரூபா 270,381,736 தொகை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் காசாக பெறப்படவில்லை.

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டில் அதிகார சபையின் பிரதான அலுவலகத்தில் ரூபா 4,481,269 பெறுமதியில் உறைப்பூச்சினை (cladding) நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முறையற்ற பரிமாற்றம் தொடர்பாக விசாரணையொன்று இடம்பெற்ற போதிலும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரை பொறுப்புடைய நபர்கள் அடையாளம் காணப்படவில்லை. | முறைகேடு வெளிப்பட்ட பின்னர் இவ்விடயம் தொடர்பாக இலஞ்சம் அல்லது ஊழலினை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டதுடன், உரிய விசாரணை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றது. பொதுத் தாளாண்மைகள் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் விசாரணையை நடத்துவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. குழுவின் பிரகாரம் 14 அலுவலர்களில் 06 நபர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதுடன் ஏனைய 08 அலுவலர்களிடமிருந்து வாக்குமூலங்களினை சேகரிக்க வேண்டியுள்ளது. | அந்த பொறுப்புவாய்ந்தவர்கள் அடையாளம் காணப்பட்டு நட்டத்தினை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 2009 ஆம் ஆண்டில் ரணவிரு சேவா அதிகார சபைக்கு நன்கொடையாக ரணவிரு சுரக்ஷ மடுர கிடைத்தது. இது அகுரஸ்ஸ, யகபெட்டவில் அமைந்துள்ள அண்ணவாக 2 ஏக்கர் நிலமாவதோடு அதன் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 26,703,250 ஆகும். அதன் பயன்பாட்டின் நோக்கமின்றி இலங்கை ஓய்வுபெற்ற சேவையாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. | இந்த நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டு 2018 செப்தம்பர் 14 இல் போர் வீரர்களின் தாய்மார்களுக்காக வயோதிபர் இல்லம் ஒன்று அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தங்குமிட வசதிகளுடன் மூன்று வயோதிப நபர்களுக்கு வழங்கப்பட்ட போதிலும் 2019 ஒக்தோபர் மாதமளவில் அவர்கள் அனைவரும் அந்த வளாகத்தைவிட்டு வெளியேறினர். பாதுகாப்பு செயலாளரின் அறிவுறுத்தல்களினை தொடர்ந்து 2020 திசெம்பர் 15 ஆம் திகதியிலிருத்து 2023 திசெம்பர் 15 வரை 03 வருட காலப்பகுதியை உள்ளடக்கி உடன்படிக்கையின் ஊடாக இலங்கை ஓய்வுபெற்ற சேவையாளர் சங்கத்திற்கு இந்த நிலம் கையளிக்கப்பட்டது. | நோக்கத்திற்கு அமைவாக சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். . |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் இலவச கல்வியை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட போர் வீரர்களின் பிள்ளைகளுக்கு மாதாந்தம் அதிகபட்சக் கொடுப்பனவாக ரூபா 3,000 படி அதிகபட்சம் 48 மாதங்களுக்கு செலுத்துவதற்காக உயர்கல்வி புலமைப்பரிசு செயற்திட்டமொன்று 2012 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், இதற்கு மேலதிகமாக அதிகார சபையானது கொத்தலாவ பாதுகாப்பு சேவைகள் பல்கலைக்கழகங்கத்தில் கட்டணங்களினை செலுத்தி கல்வியை தொடர்கின்ற 24 மாணவர்களுக்காக 244 தவணைக்கொடுப்பனவின் படி ரூபா 732,000 தொகையினை 2021 சனவரி தொடக்கம் அதிகார சபை செலுத்தியுள்ளது. | பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் கல்வியை தொடர்வதற்கு உதவும் நோக்கில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வெற்றிகரமாக சித்தியடைந்த போர் வீரர்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி புலமைப்பரிசினை வழங்குவதற்கு 2012 ஆம் ஆண்டில் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. 2021 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வரையில் இந்த செயற்திட்டத்திற்கான நிபந்தனைகள் திருத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப திருத்தப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் கொத்தலாவ பாதுகாப்பு சேவைகள் பல்கலைக்கழகங்கத்தில் கற்கைநெறி கட்டணங்களினை செலுத்தி கல்வி கற்கின்ற மாணவர்களுக்கும் இந்த புலமைப்பரிசு காணப்படுவதாக உறுதிசெய்யப்பட்டது. | வழங்கப்படுகின்ற புலமைப்பரிசிற்கான தேவை சரியாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) 2021 மே 12 ஆம் திகதிய பாதுகாப்பு அமைச்சின் MOD/01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2009 மே 19 ஆம் திகதிக்கு முன்பாக இறந்த அல்லது காணாமல் போன போர் வீரர்களின் பெற்றோர்கள் 2021 ஏப்ரல் 27 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் போர் வீரர் 55 வயதை அடையும் வரை நிலையான மாதாந்த கொடுப்பனவாக ரூபா 25,000 தொகையினை பெறுவதற்கு உரித்துடையவர் என்று குறிப்பிடுகின்றது. எனினும், அதிகார சபையினால் செலுத்தப்படுகின்ற ‘‘மபிய சுரகும’’ வழங்கப்படக்கூடாது என குறிப்பிடப்பட்ட போதிலும் போர் வீரர்கள் 55 வயதை அடைந்த பின்னர் 2 தொடக்கம் 18 மாதங்கள் வரையான காலப்பகுதிற்கான ‘‘மபிய சுரகும’’ ஆக ரூபா 711,000 தொகையினை 29 நபர்கள் சார்பில் அதிகார சபை | தொடர்பாடலில் உள்ள தாமதம் காரணமாக 2023 சனவரி மாதத்திலேயே சுற்றறிக்கை பற்றிய தகவலை ரணவிரு சேவா அதிகார சபை பெற்றுக்கொண்டது. அந்த நேரத்தின் போது ‘‘மபிய சுரகும’’ (55 வயதை அடைந்த போர் வீரர்கள் காரணமாக) பெறுகின்ற போர் வீரர்களின் 26 பெற்றோர்கள் இந்த சுற்றறிக்கையின் கீழ் நன்மையினை பெற உரித்துடையவர்கள் அல்ல என அறியப்பட்டதுடன் 2023 சனவரி மாதத்திலிருந்து அவர்களுக்கு இந்த கொடுப்பனவினை செலுத்துவது நிறுத்தப்பட்டது. 2023 சனவரி முதல் உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் ‘‘மபிய சுரகும’’ செலுத்தப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. | நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் யுத்த வீரர்கள் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும். |

மேலதிகமாக செலுத்தியுள்ளது.

### 3.3 நிதிகளின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் பிரதான வருமான மூலமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நிலையான வைப்பு வட்டி வருமானமாக தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பு வட்டியாக ரூபா 7,358,875 பெறப்பட்டதுடன், அந்த வட்டித் தொகையில் இருந்து ஈட்டப்பட்ட சேமிப்பு வட்டியாக ரூபா 323,865 என்பன வினைத்திறனாக பயன்படுத்தப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. | உரிய வங்கிகளில் பராமரிக்கப்படுகின்ற நியைான வைப்பிலிருந்தான வட்டி வருமானமானது தேசிய சேமிப்பு வங்கி மற்றும் மக்கள் வங்கியில் உள்ள முறையே 100010885550 மற்றும் 259200160007849 சேமிப்பு கணக்கிலக்கத்திற்கு செலவு வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. திறைசேரி தீர்மானிக்கப்பட்ட லாட்டரி சபை ஒதுக்கத்தினை வழங்காமை மற்றும் பாதீட்டு ஒதுக்கங்களினை முறையாக விடுவிக்காமை போன்ற காரணங்களினால் நிதிகள் இந்த சேமிப்பு கணக்குகளில் நிறுத்திவைக்கப்பட்டன. இந்த நிறுத்தி வைத்தலுக்கான நோக்கமாக ரணவிரு நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதாகும். | நிதிகள் அதிகபட்ச விளைதிறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 பயனற்ற அல்லது பயன்படுத்தப்படாத ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆம் ஆண்டில் அதிகார சபை ''கிரலமட கும்புர'' என்று அழைக்கப்படும் ரூபா 1,500,000 பெறுமதியுடைய ஆதனத்தினை நன்கொடையாக பெற்றது. இது 1 ஏக்கர், 1 ரூட் மற்றும் 29 பேர்ச்சஸ் உடைய ஆதனமாகும். மீளாய்வாண்டின் இறுதியின் போது இந்த ஆதனம் ஆக்கபூர்வமற்றதாகவும், இதனை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமலும் இருந்தது. | போர் வீரர்களுக்கு பகிரந்தளிப்பதற்கு பொருத்தமில்லாத நிலம் என்று கேள்வி எழுந்ததனால், கலஹிடியவ விவசாய சேவை நிலையமானது இந்த ஆதனம் அரிசி பயிருடுவதற்கு பொருத்தமில்லை என்று அறிக்கையிட்டது. இந்த மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு நிலத்தினை மாற்றிக்கொடுப்பதற்கு அதிகார சபையின் முகாமைத்துவ சபை அங்கீகாரமளித்தது. சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஆதனத்தினை பொறுப்பேற்பதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நோக்கத்திற்கு அமைவாக சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |